# 65 ஆவது ஆண்டு

# ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா அழைப்பிதழ்

(இறைவனது பாத கமலங்களில் 65 ஆவது ஆண்டு)




**08-11-2018 முதல்**
**14-11-2018 முடிய**

## சிறப்பு நிகழ்ச்சிகள்

- மஹாருத்ரம்
- ஆறுமுக லக்ஷார்ச்சனை / த்ரிசதி
- ஷஷ்டி விழா மலர் வெளியீடு
- அருணகிரிநாதர் விழா
- தேவார இன்னிசை/திருப்புகழ் இசை
- சொற்பொழிவு
- ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா
- தேவசேனா வள்ளி கல்யாணம்

ஆடும்பரி



வேல்



அணிசேவல்

எனப் பாடும் பணியே பணியா அருள்வாய்

ஒரு திரு மரகத துங்க மாமிசை
அறுமுக ஒளிவிட வந்து நான் மறை
உபநிடம் அதனை விளங்க நீ அருள் புரிவாயே

# முருகன் திருவருட் சங்கம்


சென்னை-600005 044-2854 4713



சேயடைந்த சேய்ஞலூரில் செல்வன சீர்பரவித்
தோயடைந்த வண்வயல் சூழ் தோணிபு ரத்தலைவன்
சாயடைந்த ஞானமல்கு சம்பந்தன் இன்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார் வானுலகு ஆள்பவரே

(முதல் திருமுறை) ஸ்ரீ திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்-தேவாரம்

# 65 ஆவது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா




**08-11-2018 வியாழக்கிழமை முதல் 14-11-2018 புதன்கிழமை முடிய**

விழா நடைபெறும் இடம் :

## பண்டு கல்யாண மண்டபம்

8, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி : 2844 5347

ஸ்ரீ முருகப்பெருமான் பூஜித்த சேய்ஞலூரில் எழுந்தருளியுள்ள ஈசன் சீர்பரவி, வளம் திகழ் வயல்சூழ் தோணிபுர நாதன்; புகழும், ஞானமும் மல்கும் ஞானசம்பந்தன் மொழிந்த இத் திருப்பதிகத்தை வாய் மணக்கப் பாடவல்லவர்கள் வானுலகு ஆள்பவர் ஆவர்.

காயச் செவ்விக் காமற் காய்ந்து கங்கையைப்
பாயப் படர்புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாயச் சூரன்று அறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரைத் தொழுது வினையை வீட்டுமே
(இரண்டாம் திருமுறை) ஸ்ரீ திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் - தேவாரம்

---

உ

முருகா சரணம்

# முருகன் திருவருட் சங்கம்

101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
ஸ்தாபிதம் : 1954     தொலைபேசி : 2854 4713

ஆனைமுகவற்கு இளைய ஐயனின் திருவருளினால் சங்கத்தின் 65ஆவது ஆண்டு **ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா 08-11-2018 வியாழக்கிழமை** முதல் **14-11-2018 புதன்கிழமை** முடிய ஏழு தினங்கள் நிகழ்ச்சியில் கண்டவண்ணம் திருவல்லிக்கேணி பண்டு கல்யாண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

அடியார்கள் சங்கத்தின் இந்த 65ஆவது ஆண்டில் நடைபெறும் **ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா** நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுடன், **தங்களால் இயன்ற அளவு பொருளுதவிகளை அளித்து,** விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறுவதற்குத் தங்கள் பேராதரவினை நல்கி, வேண்டுகின்ற அடியார்களுக்கு வேண்டிய அரிய பொருள்களை, வேண்டுமளவில் வழங்கும் **ஸ்ரீ வள்ளி குஞ்சரி மணவாளப் பெருமானின்** திருவருளினால் வாழ்க்கையில் இஹபர சௌபாக்கியத்துடனும், சகல செல்வயோக மிக்க பெருவாழ்வுடனும் வாழப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
**முருகன் திருவருட் சங்கத்தார்**

---

பஞ்ச பாணம் எனச் சொல்லப்படும் தாமரை, அசோகு, மா, முல்லை, கருங்குவளை என்னும் ஐங்கணையால் தாக்கிய மன்மதனின் உடலின் வடிவத்தை எரித்து, கங்கையைப் படர்ந்த சடைமுடியில் ஏற்றுப் பதியுமாறு செய்த மேலான பரம்பொருளாகிய ஈசன், மாயை வல்ல சூரபன்மனை மாய்த்த அழகனாகிய முருகவேளின் தந்தையாவார். அப்பெருமானுடைய **மீயச் சூரைத் தொழுது** வணங்கி நும்மைப் பற்றியுள்ள வினையை வீழ்த்துவீராக.

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
அற்ற மறைப்பதும் உன்பணியே அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே பிரம புரத்தை உகந்தனையே

**(மூன்றாம் திருமுறை) ஸ்ரீ திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் - தேவாரம்**

---

உ
முருகா சரணம்

# முருகன் திருவருட் சங்கம்

101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
ஸ்தாபிதம் : 1954 தொலைபேசி : 2854 4713

## நிகழ்ச்சி நிரல்

**8-11-2018** வியாழக்கிழமை முதல் **12-11-2018** திங்கட்கிழமை முடிய ஐந்து தினங்களும் காலை 7.00 மணி முதல் பிற்பகல் வரை **ஸ்ரீ வள்ளி தேவசேனா ஸமேத ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சுவாமிக்கு** அபிஷேக ஆராதனைகளுடன், மஹாருத்ர ஜபமும், ஆறுமுக லக்ஷார்ச்சனையும், மாலையில் ருத்ர ஜபமும், இன்னிசை நிகழ்ச்சிகளும், சொற்பொழிவுகளும் நடைபெற உள்ளன. **11-11-2018** ஞாயிற்றுக்கிழமை அன்று அதிகாலை சூரிய நமஸ்காரமும், அதனைத் தொடர்ந்து அருணகிரிநாதர் விழாவினை முன்னிட்டு, காலை 8.00 மணி முதல் **திருப்புகழ்** அகண்ட பஜனை வழிபாடும், **13-11-2018** செவ்வாய்க்கிழமை **"மஹா ஸ்கந்த ஷஷ்டி"** அன்று காலை கணபதி ஹோமத்துடன், மஹாருத்ர ஜப ஹோம பூர்த்தியும், கலசாபிஷேகமும், லக்ஷார்ச்சனைப் பூர்த்தியும், குமாரபோஜனமும், அன்னதானமும், மாலை **த்ரிசதி** அர்ச்சனையும் மறுதினம் **14-11-2018** புதன்கிழமை அன்று காலை **"ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாண வைபவமும்"** நடைபெற உள்ளன. **10-11-2018** சனிக்கிழமை அன்று மாலை ஷஷ்டி விழா மலர் வெளியீடு நிகழ்ச்சியில் **"பன்னிரு திருமுறைத் திரட்டு"** என்ற நூலினை சங்கம் வெளியிடுகிறது.

---

ஈசனே ! உமாதேவியார் உம்மைப் பிரியாது பொருந்தி இருப்பது உமது திருமேனியையே ! மெய்ஞ் ஞானிகள் உணர்ந்து போற்றுவது உமது மெய்த் தன்மை உடைய பேரருளையே ! கற்றுணர்ந்த ஞானிகள் வெறுப்பது பந்தம் உடைய மனைவி மக்கள் முதலாக மேவும், குடும்ப வாழ்க்கையே ! நீவிர் நெற்றிக் கண்ணால் சினந்தது மன்மதனையே ! உமது திருமேனியின் எழிலை மறைத்து விளங்குவது, பாம்பே ! தேவர்கள் செய்வதும் உமக்குப் பணிவிடையே ! நீவிர் பெற்று, அழகுடன் முகிழ்த்தது முருகப் பெருமானையே ! பிரமபுரத்தினை மகிழ்ந்து விளங்கியவரே!

குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள் தாதை என்றும்
நறவிள நறுமென் கூந்தல் நங்கையோர் பாகத் தானைப்
பிறவியை மாற்று வானைப் பெருவேளூர் பேணி னானை
உறவினால் வல்ல னாகி உணருமாறு உணர்த்து வேனே.

**(நான்காம் திருமுறை) ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் - தேவாரம்**

---

## 8-11-2018 வியாழக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை<br>பகல் | 07.30 மணி முதல்<br>12.00 மணி வரை | **விக்னேச்வர பூஜை,**<br>**மஹாருத்ர ஜப ஸங்கல்பம்**<br>**ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன்**<br>**முருகப்பெருமானுக்கு அபிஷேக, ஆராதனை**<br>**தொடர்ந்து ஈசானமுக (மேல் நோக்குதல்)**<br>**ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| மாலை<br>மாலை | 03.30 மணி முதல்<br>05.25 மணி வரை | **மஹா ருத்ர ஜபம்** |
| மாலை<br>இரவு | 05.30 மணி முதல்<br>07.00 மணி வரை | **தேவார இன்னிசை**<br>**ஸ்ரீ திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்**<br>**அருளிய தேவாரம்**<br>வேதகீதன் குடந்தை **ஸ்ரீ V. லக்ஷ்மணன்**<br>**குழுவினர்** |
| இரவு<br>இரவு | 07.05 மணி முதல்<br>08.35 மணி வரை | ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய **ஸௌந்தர்யலஹரீ**<br>சொற்பொழிவு<br>பனையூர் **ஸ்ரீ V. ராஜாராமன்,** M.E., (Asst.Professor),<br>Rajalakshmi Engg. College, Thandalam<br>**ஸ்லோகங்களின் தலைப்பு :**<br>1. பராசக்தியின் உத்கர்ஷம்<br>2. பாத தூளி மஹிமை<br>3. மோக்ஷப்ரதமான பாத தூளி<br>4. பாதகமலங்களின் நிகரற்ற சக்தி<br>5. பூஜையின் மஹிமை<br>6. கடைக்கண்ணின் கருணை<br>7. சக்தியின் ரூப வர்ணனம் |

---

குறத்தியாய்த் தோன்றிய வள்ளிப் பிராட்டியைத் திருமணம் புரிந்த செல்வக் குமரவேளின் தந்தை, சிவபெருமான், அவர், தேன் மணக்கும் மென்மையான கூந்தலை உடைய உமா தேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர்; தன்னை வணங்கும் அடியவர்களின் பிறவி நோயைத் தீர்த்து அருள்பவர்; அப்பெருமான் பெருவேளூர் என்கிற தலத்தில் விரும்பி வீற்றிருப்பவர். அவரை நன்கு பற்றி இருந்து ஒன்ற வல்லவனாகி நான் உணரும் வகையில் உணர்த்துவேன்..

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே

(ஐந்தாம் திருமுறை) ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் - தேவாரம்

## 9-11-2018 வெள்ளிக்கிழமை

காலை 07.30 மணி முதல் / பகல் 12.00 மணி வரை — **மஹா ருத்ர ஜபத்துடன் முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து பூர்வ தத்புருஷமுக (கிழக்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை**

மாலை 03.30 மணி முதல் / மாலை 05.25 மணி வரை — **மஹா ருத்ர ஜபம்**

மாலை 05.30 மணி முதல் / இரவு 07.00 மணி வரை — **தேவார இன்னிசை ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரம்**
திருமுறை கலாநிதி குற்றாலம் **ஸ்ரீ சுப்ரமணியம் ஓதுவார் குழுவினர்**

இரவு 07.05 மணி முதல் / இரவு 08.35 மணி வரை — ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய **ஸௌந்தர்யலஹரீ** சொற்பொழிவு
பனையூர் **ஸ்ரீ V. ராஜாராமன்,** M.E., (Asst.Professor), Rajalakshmi Engg. College, Thandalam

8. பராசக்தியின் ஸ்தான வர்ணனம்
9. தேவியின் அனுஸந்தானம்
10. ஆதார சக்ரத்தில் சக்தியின் வர்ணனம்
11. ஸ்ரீ சக்ர வர்ணனம்
12. தேவியின் ஸௌந்தர்ய வர்ணனம்
13. கடைக்கண்ணினுடைய பார்வையின் மஹிமை
14. ஆதார சக்ரத்தின் மேலுள்ள சக்தியின் வர்ணனம்

ஸ்ரீ முருகப் பெருமானைப் பெற்ற உமா தேவியாரைப் பாகமாகச் கொண்டு விளங்கும் சிவபெருமான், அழகிய கடம்பையில் திகழும் திருக்கரக் கோயிலில் வீற்றிருப்பவர். அப்பரமன், அடியவரைத் தாங்கிக் காத்தருளும் கருணை வளத்தை இயல்பாகக் கொண்டு விளங்குபவர். என்னுடைய கடனாவது அப் பெருமானுக்குத் திருத்தொண்டு ஆற்றுதலே ஆகும்.

கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய் காலனையும் காலால் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழை மானின் தோலான் கண்டாய் புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய் வெண்ணீற்றான் கண்டாய் விரதன்கண்டாய் நஞ் செந்தின் மேய
**வள்ளி மணாளற்குத்** தாதை கண்டாய் மறைக்காட்டுறையும் மணாளன் தானே

(ஆறாம் திருமுறை) ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் - தேவாரம்

---

## 10-11-2018 சனிக்கிழமை

காலை 07.00 மணி முதல்
பகல் 12.00 மணி வரை
**மஹா ருத்ர ஜபத்துடன்**
**முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை**
**தொடர்ந்து (தக்ஷிண) தெற்கு நோக்குதல்**
**அகோரமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனை**

மாலை 03.30 மணி முதல்
மாலை 05.25 மணி வரை
**மஹா ருத்ர ஜபம்**

மாலை 05.30 மணி
**ஷஷ்டி விழா மலர் வெளியீடு**
பன்னிரு திருமுறைத் திரட்டு

இறைவணக்கம் — குமாரி **சிவப்பிரியா ஸ்ரீதர்**

துவக்க உரை — **Dr. பஞ்சாபகேசன் (மோகன்)**
M.Sc., B.Ed.,CAIIB., PGD PM & LL,
M.A. (His.), M.Phil (His.), M.Sc. (Psy.)
M.D. (Acu.) Ad (ACU), Punjab National Bank (Retd.)

தலைமை உரை நிகழ்த்தி
விழா மலரினை
வெளியிட்டு வழங்குபவர் — பனையூர் **ஸ்ரீ V. ராஜாராமன்,** M.E., (Asst.Professor),
Rajalakshmi Engg. College, Thandalam

சிறப்பு விருந்தினர் — **ஸ்ரீ B. கிருஷ்ணகுமார்**
Dy. General Manager, Sundaram Motors,
Chennai. (Retd.)
Grandson of Sri T.M. Krishnaswamy Iyer
(திருப்புகழ் மணி)

மலரின் பிரதிகளை
பெறும் ஓதுவார்கள்
1. வேதகீதன் குடந்தை **ஸ்ரீ V. லக்ஷ்மணன்**
2. திருமுறை கலாநிதி குற்றாலம் **ஸ்ரீ சுப்ரமணியன்**
3. கந்தர்வ கான வித்யாதர குருஜி **ஸ்ரீ நாகநாத தேசிகர்**
4. திருவாசகச் செந்நாவலர் **ஸ்ரீ பா. சற்குருநாதன்**

நன்றியுரை : — முருகா **ஸ்ரீ ரமணி ராமஸ்வாமி,** C.A.,
Director India Intellysis Technology (P.) Ltd.
Chennai (Retd.)

---

ஸ்ரீ மணவாளத் திருக்கோலத்தில் உமா தேவியாரை உடனாகக் கொண்டு திருமறைக் காட்டில் வீற்றிருக்கும் சிவபெருமான், இடுகாட்டில் நடனம் புரிபவர், காலனைக் காலால் உதைத்தவர், மான்தோல் தரித்தவர், புலித்தோலை உடுத்திய பரமன், வெண்மையான பிறைச் சந்திரனைச் சடை முடிமேல் சூடியவர்; திருவெண்ணீறு அணிந்த திருமேனியை உடையவர். அவர் திருச்செந்தூரில் காட்சி அளிக்கும் முருகப் பெருமானின் தந்தையாவார்.

செறுவினிற்செழுங் கமலம் ஓங்குதென் புகலூர் மேவிய செல்வனை
நறவம்பூம் பொழில் நாவலூரான் வனப்பகையப்பன் சடையன்தன்
சிறுவன்வன் தொண்டன் ஊரன்பாடிய பாடல் பத்தினை வல்லவர்
அறவனார் அடி சென்றுசேர்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே

**(ஏழாம் திருமுறை) ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் - தேவாரம்**

---

| | |
|---|---|
| இரவு 07.30 மணி முதல்<br>இரவு 09.00 மணி வரை | ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய **ஸௌந்தர்யலஹரீ** சொற்பொழிவு<br>பனையூர் **ஸ்ரீ V. ராஜாராமன்,** M.E., (Asst.Professor), Rajalakshmi Engg. College, Thandalam<br>**ஸ்லோகங்களின் தலைப்பு :**<br>15. உபாஸனத்தால் ஸாரஸ்வதப் ப்ரயோகம்<br>16. வித்யா விலாஸ லாபம்<br>17. வாக்விலாஸ லாபம்<br>18. ஸ்த்ரீ வச்யகர ஸாதனம்<br>19. த்ரிலோக வச்யம்<br>20. விஷம், ஜ்வரம் இவைகளைப் போக்கும் சக்தி<br>21. பரமாஹ்லாத ஸாதனம் |

## 11-11-2018 ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| காலை 06.30 மணி | **சூர்ய நமஸ்காரம்** |
| காலை 07.30 மணி முதல்<br>பகல் 12.00 மணி வரை | **மஹா ருத்ர ஜபத்துடன் முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து (உத்தர) வாமதேவமுக (வடக்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| மாலை 08.00 மணி முதல்<br>பிற்பகல் 02.00 மணி வரை | **ஸ்ரீ அருணகிரிநாதர் விழா**<br>திருப்புகழ் அகண்ட பஜனை வழிபாடு<br>நிகழ்த்துபவர்கள் :<br>**முருகன் திருவருட் சங்கத்தார்**<br>51 திருப்புகழ் மற்றும் அநுபூதி அலங்கார வகுப்புகளிலிருந்து சில பாடல்கள். |
| மாலை 03.00 மணி முதல்<br>மாலை 05.00 மணி வரை | **மஹா ருத்ரம்** |
| மாலை 05.05 மணி முதல்<br>இரவு 07.00 மணி வரை | **தேவார இன்னிசை**<br>**ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரம்**<br>திருமுறை கலாநிதி. பண்ணிசைப் பேரறிஞர்<br>திருத்தணி **ஸ்ரீ சுவாமிநாத ஓதுவார்** குழுவினர் |

---

**வயல்களில் செந்தாமரைகள் செழிக்கின்ற அழகிய திருப்புகலூரில் விரும்பி எழுந்தருளியுள்ள செல்வனாகிய சிவபெருமானைத் திருநாவலூரனும் வனப்பகைக்குத் தந்தையும், சடையனார்க்கு மகனும், வன் தொண்டனும் ஆகிய நம்பி ஆரூரன் பாடிய இந்தப் பத்துப் பாடல்களைப் பாடவல்லவர்கள் அறவடிவினனாகிய அப்பெருமானது அரிய திருவடிகளில் சென்று சேர்வர் என்பதற்கு சந்தேகம் எதுவும் இல்லை.**

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத் துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப் பந்தமு மாய்வீடும் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினார்க்(கு) ஆடப் பொற் சுண்ணம் இடிந்தும் நாமே

**(எட்டாம் திருமுறை) ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் - திருவாசகம்**

---

| | | |
|---|---|---|
| இரவு 07.05 மணி முதல்<br>இரவு 09.00 மணி வரை | | ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய **ஸௌந்தர்யலஹரீ** சொற்பொழிவு<br>பனையூர் **ஸ்ரீ V. ராஜாராமன்,** M.E., (Asst.Professor), Rajalakshmi Engg. College, Thandalam<br>**ஸ்லோகங்களின் தலைப்பு :**<br>22. சக்தியின் ஸ்தோத்ர மஹிமை<br>23. சக்தி தத்வ மஹத்வம்<br>24. ஸ்ரீதேவியின் மஹத்வம்<br>25. சக்தியின் பூஜையினால் மும்மூர்த்திகளையும் பூஜை செய்த பலன் ஸித்திக்கிறது<br>26. ஸ்ரீ பரமேச்வரனின் மஹத்வம்<br>27. ஆறுவித ஐக்யானு ஸந்தானம்<br>28. ஸ்ரீ தேவியின் தாடங்க மஹிமை<br>29. ஸ்ரீ பரமேச்வரனின் மஹிமை |

## 12-11-2018 திங்கட்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 07.00 மணி முதல்<br>பகல் 12.00 மணி வரை | | **மஹா ருத்ர ஜபத்துடன் முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து ஸத்யோஜாத முக (மேற்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| மாலை 03.25 மணி முதல்<br>மாலை 05.25 மணி வரை | | **மஹா ருத்ர ஜபம்** |
| மாலை 05.30 மணி முதல்<br>இரவு 07.00 மணி வரை | | **திருவாசகம் இன்னிசை**<br>**ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்**<br>திருவாசகச் செந்நாவலர்<br>**ஸ்ரீ பா. சற்குருநாதன் ஓதுவார் குழுவினர்** |
| இரவு 07.05 மணி முதல்<br>இரவு 09.00 மணி வரை | | ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய **ஸௌந்தர்யலஹரீ** சொற்பொழிவு<br>பனையூர் **ஸ்ரீ V. ராஜாராமன்,** M.E., (Asst.Professor), Rajalakshmi Engg. College, Thandalam<br>**ஸ்லோகங்களின் தலைப்பு :**<br>30. ஸ்ரீ தேவியின் தாதாத்ம்ய மஹிமை |

---

ஸ்ரீ வேதம், வேள்வி, பரமாத்மா, பிரபஞ்சம், வெளிச்சம், இருள், துன்பம், இன்பம், சக்தி, சிவசக்தி, பந்தம், மோக்ஷம், துவக்கம், முடிவு ஆகிய இத்தனையுமாய் இருப்பவன் சிவன். அப்பெரிய பொருளைப் பாடிப் பொற் சுண்ணம் இடிப்போம்.

தனதன்நல் தோழா சங்கரா ! சூல பாணியே ! தாணுவே சிவனே !
கனகநல் தூணே ! கற்பகக் கொழுந்தே கண்கள்மூன் றுடைதோர் கரும்பே!
அனகனே குமர விநாயக சனக அம்பலத்து அமரசே கரனே !
உனகழல் இளையென் நெஞ்சினுள் இனிதாத் தொண்டனேன் நுகருமா நுகரே

(ஒன்பதாம் திருமுறை) ஸ்ரீ திருமாளிகைத்தேவர் - திருவிசைப்பா

---

31. ஸ்ரீ தேவியின் தந்த்ரங்கள்
32. தேவியின் மந்த்ரம்
33. ஸ்ரீதேவியின் மந்த்ரம்
34. பூர்வ கௌலம்
35. ஸ்ரீதேவியின் வர்ணனை
36. ஆக்ஞா சக்ரத்தின் மஹிமை

## 13-11-2018 செவ்வாய்க்கிழமை

## மஹா ஸ்கந்த ஷஷ்டி விழா

| | |
|---|---|
| காலை 06.00 மணி | **கணபதி ஹோமம்** |
| காலை 07.30 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை | **முருகப்பெருமானுக்கு விசேஷ அபிஷேகம் மஹாருத்ர ஜபபூர்த்தி, ஹோமம், கலசாபிஷேகம் தொடர்ந்து அதோமுக (கீழ் நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| பிற்பகல் 01.30 மணி | **லக்ஷார்ச்சனைப் பூர்த்தி, குமார போஜனம், அன்னதானம்** |
| மாலை 03.30 மணி முதல் மாலை 05.00 மணி வரை | **திருப்புகழ் பக்திப் பாடல்கள் இன்னிசை** ஸ்ரீமதி **கோமதிஸ்ரீ குழுவினர்** |
| மாலை 05.05 மணி முதல் இரவு 06.55 மணி வரை | **ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய த்ரிசதி அர்ச்சனை** |
| இரவு 07.05 மணி முதல் இரவு 09.00 மணி வரை | ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய **ஸௌந்தர்யலஹரீ** சொற்பொழிவு<br>பனையூர் **ஸ்ரீ V. ராஜாராமன்,** M.E., (Asst.Professor), Rajalakshmi Engg. College, Thandalam<br>ஸ்லோகங்களின் தலைப்பு :<br>37. விசுத்தி சக்ரத்தின் மஹிமை<br>38. அனாஹத சக்ரத்தின் மஹிமை<br>39. ஸ்வாதிஷ்டான சக்ரத்தின் ப்ரபாவம் |

---

குபேரனுக்கு நல்ல தோழனாக விளங்குபவனே ! இன்பம் செய்பவனே ! சூலப் படையினைக் கையில் ஏந்தியவனே ! அழிவில்லாதவனே ! பேரின்ப வடிவினனே ! அழகிய பொன்தூண் போன்றவனே! கற்பகத் தளிர் போலும் அழகனே ! மூன்று கண்களை உடைய மேலான கரும்பு போன்ற இனியவனே ! தூய்மை உடையவனே ! முருகக் கடவுளுக்கும் விநாயகப் பெருமானுக்கும் தந்தையே ! பொன்னம் பலத்தில் வந்து தரிசிக்க நிற்கும் இந்திரன் முதலான தேவர்களுக்குத் தலைமை பூண்டவனே ! தொண்டனாகிய நான் உன் திருவடிகள் இரண்டையும் என் மனத்தில் இனிமையோடு கலந்து அனுபவிக்கும்படி நீ திருவருள் புரிவாய்.

40. மணிபூரக சக்ரத்தின் ப்ரபாவம்
41. மூலாதார சக்ரத்தின் மஹிமை
42. ஸ்ரீ தேவியின் கிரீட வர்ணனை
43. ஸ்ரீ தேவியின் கேச ஸமூஹ வர்ணனை

இரவு 09.05 மணி முதல்
இரவு 10.00 மணி வரை
**திருப்புகழ்** மற்றும் **வேல்மாறல் பாராயணம்**
**முருகன் திருவருட் சங்கம்**

## 14-11-2018 புதன்கிழமை

காலை 07.30 மணி முதல்
பகல் 01.00 மணி வரை
திருப்புகழில் **ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாணம்**
நிகழ்த்துபவர்கள் :
**ஸ்ரீ பாண்டுரங்க பஜனை மண்டலியினர்**
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

மாலை 03.00 மணி முதல்
மாலை 03.30 மணி வரை
**வேத பாராயணம்**

மாலை 03.35 மணி முதல்
மாலை 05.05 மணி வரை
ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய **ஸௌந்தர்யலஹரீ**
சொற்பொழிவு
பனையூர் **ஸ்ரீ V. ராஜாராமன்,** M.E., (Asst.Professor),
Rajalakshmi Engg. College, Thandalam
ஸ்லோகங்களின் தலைப்பு :
44. ஸ்ரீ தேவியின் ஸீமந்த (வகிடு) வர்ணனை
45. ஸ்ரீ தேவியின் முன்நெற்றி கேசத்தின் வர்ணனை
46. ஸ்ரீ தேவியின் நெற்றி வர்ணனை
47. ஸ்ரீ தேவியின் புருவங்களின் வர்ணனை
48. ஸ்ரீ தேவியின் நேத்ரங்களின் வர்ணனை
49. ஸ்ரீ தேவியின் த்ருஷ்டியின் வர்ணனை
50. ஸ்ரீ தேவியின் கடாக்ஷ வீக்ஷண வர்ணனை

மாலை 05.10 மணி முதல்
மாலை 05.30 மணி வரை
விழா நிறைவு இசை
முருகன் திருவருட் சங்கம்

நக்கீரர் தாமுரைத்த நன் முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான் நினைத்த எல்லாம் தரும்.

(பதினோராம் திருமுறை) ஸ்ரீ நக்கீரதேவ நாயனார் - திருமுருகாற்றுப்படை

---

## போஷகர்கள்

| | |
|---|---|
| ஸ்ரீ முருகா ரமணி | தி. நகர், சென்னை - 600 017. |
| ஸ்ரீ பாலசந்திரன் K.N. | மேற்கு மாம்பலம், சென்னை - 600 033 |
| ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஸ்வாமிநாதன் V. | நங்கைநல்லூர், சென்னை - 600 061 |
| ஸ்ரீ சந்த்ரமௌளி P. | மந்தைவெளி, சென்னை - 600 028 |
| ஸ்ரீ வேங்கடராமன் V. | அரும்பாக்கம், சென்னை - 600 106 |
| ஸ்ரீ ஸதாசிவம் K.S. | வடபழநி, சென்னை - 600 026 |
| ஸ்ரீ அனந்த கிருஷ்ணன் N. | பெங்களூரு, கர்நாடகா - 560 066 |
| ஸ்ரீ கடம்பவன ஸுந்தரம் N. | காஞ்சிபுரம், தமிழ்நாடு - 631 501 |

**தலைவர் :**

| | |
|---|---|
| ஸ்ரீ கணேசன் V. | அபிராமபுரம், சென்னை - 600 018 |

**உப தலைவர் :**

| | |
|---|---|
| ஸ்ரீ ஸுப்ரஹ்மணியன் K.V. | பெசன்ட் நகர், சென்னை - 600 090. |

**செயலாளர் :**

| | |
|---|---|
| ஸ்ரீ சந்த்ரசேகர் N. | திருவல்லிக்கேணி, சென்னை - 600 005 |

**பொருளாளர் :**

| | |
|---|---|
| ஸ்ரீ நாராயணன் V.P. | மயிலை, சென்னை - 600 004. |

**இணைச் செயலாளர்கள் :**

| | |
|---|---|
| ஸ்ரீ ஸ்ரீதர் ஸுந்தரம் S. | மயிலை, சென்னை - 600 004 |
| ஸ்ரீ ஜானகிராமன் V. | நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 |

**செயற்குழு உறுப்பினர்கள் :**

| | |
|---|---|
| ஸ்ரீ வால்மீகி S. | அபிராமபுரம், சென்னை - 600 018 |
| ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி S. | இராமாபுரம், சென்னை - 600 089 |
| ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் V. | பள்ளிக்கரணை, சென்னை - 600 100 |
| ஸ்ரீ இராமமூர்த்தி V. | மடிப்பாக்கம், சென்னை - 600 091 |
| ஸ்ரீ விச்வநாதன் N. (Jr.) | அபிராமபுரம், சென்னை - 600 018 |
| ஸ்ரீ ஸ்ரீதரன் S. | மந்தைவெளி, சென்னை - 600 028 |
| ஸ்ரீ கணேஷ்ராமன் M. | வடபழநி, சென்னை - 600 026 |
| ஸ்ரீ மோகன் S. | அபிராமபுரம், சென்னை - 600 018 |
| ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யம் S. | தியாகராய நகர், சென்னை - 600 017 |
| ஸ்ரீ ரெங்கநாதன் K. | முகலிவாக்கம், சென்னை - 600 125 |

**கௌரவத் தணிக்கையாளர்**

| | |
|---|---|
| ஸ்ரீ ஹரேஷ் S. | தியாகராய நகர், சென்னை - 600 017 |

---

ஸ்ரீ நக்கீரர் தாம் உரைத்த நல்ல திருமுருகாற்றுப்படை என்னும் தெய்வீக நூலைத், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தினந்தோறும் ஓதினால் அது முடியும் முன்னே மாமுருகன் வந்து மனக்கவலையைத் தீர்த்தருளி, நாம் நினைத்ததை எல்லாம் தருவான்.

செய்ய மேனிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ் சுகத்துப் பயிரவர்யாம்
உய்ய அமுது செய்யாதே ஒளித்ததெங்கே எனத்தேடி
மையல்கொண்டு புறத்தணைய மறைந்த அவர் தாம் மலைபயந்த
தைய லோடுஞ் சரவணத்துத் தனய ரோடுந் தாம் அணைவார்

(பன்னிரண்டாம் திருமுறை) ஸ்ரீ சேக்கிழார் பெருமான் - பெரியபுராணம்

---

## வெண்பா

**முருகன் திருவருட் சங்கத்தில் நெஞ்சம்**
**உருகிப் புகுவார் தமக்குப் - பெருகுமே**
**அன்றே பெரும் பொருளும் ஆண்டவன் பேரருளும்**
**நன்றே நலம் பலவும் காண்**

- அருட்க்விமணி காமாக்ஷிதாஸர்
(ஸ்தாபகர் - முருகன் திருவருட்சங்கம்)



பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பத்திசெய்கேன் என்னை நீ இகழ வேண்டா
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்து ஆடுகின்ற
அத்தாஉன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே.

**(நான்காம் திருமுறை) ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் - தேவாரம்**


ஈசனே ! பரம்பொருளே ! மேன்மை பொருந்திய யோகத்தின் நாயகனாய் விளங்கும் இறைவனே ! நான், பத்தி உணர்வுடன் பாடுவதில்லை. உள்ளத்தில் ஒரு வேட்கையை வைத்துப் பத்தி செய்கின்றேன். ஆயினும் என்னை இகழ்ந்து ஒழியாது அருள்புரிவீர். முத்தனே ! முதல்வனே ! தில்லைச் சிற்றம்பலத்தில் நடனம் புரியும் அத்தனே ! உன் திருகூத்தினைக் காணுவதற்காக அடியேன் வந்துள்ளேன்.

---

சிவந்த மேனியும் கரிய முடியும் செழிய போர்வையும் கொண்ட வயிரவர் நாம் உய்யும்படி உணவு உண்ணாமல் எங்கே ஒளிந்தார்? என்று தேடியவராகி, மயங்கி வெளியே வர, மறைந்தருளிய அவ்வயிரவர்தாமே, மலை மகளாரான உமையம்மையாருடனும் சரவணப் பொய்கையிலே வளர்ந்த திருமகனாரான முருகப் பெருமானோடும் அணைவார்.



| | | | |
|---|---|---|---|
| புமி அதனில் | ப்ரபு ஆன | சமரில் எதிர்த்(து) | சுர்மாள |
| புகலியில்வித் | தகர் போல | தனி அயில்விட்(டு) | அருள்வோனே |
| அமிர்த கவித் | தொடைபாட | நமசிவயப் | பொருளோனே |
| அடிமை தனக்கு | அருள்வாயே | ரசதகிரிப் | பெருமாளே |



போர்களத்தில் எதிர்த்து வந்த சூரபன்மனை அழியுமாறு வேல் படையை ஏவி அருளியவரே! நம சிவய என்ற ஐந்தெழுத்தின் மெய்ப்பொருளாக விளங்குபவரே! திருகயிலை மலையில் எழுந்தருளியுள்ள பெருமிதமுடையவரே! இந்த பூ உலகில் தனிப் பெரும் தலைவராகவும், சீர்காழி பதியில் திருவவதாரம் செய்த ஸ்ரீ ஞான சம்பந்தப் பெருமானைப் போல், இறப்பை நீக்கி மரணம் இல்லாத வாழ்வினை வழங்கும் தேவார பநுவல்களைப் போல் அடியேனும் பாடுமாறு அடிமையாகிய எனக்கு திருவருள் புரிவீர்.